***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***STC.No. 66/2024 – P.W. 4 (LW7)***

| | |
|---|---|
| *Name* | விஷ்ணு உதவி மருத்துவர்<br>அறுவை சிகிச்சை பிரிவு<br>தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனை |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *38* |

2 வது எதிரி ஆஜர். 1 வது **எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 19.05.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

**இவ்வழக்கின் சாட்சி தற்போது தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் உதவி மருத்துவராக அறுவை சிகிச்சை பிரிவில் பணிபுரிந்து வருவதால் காணொளி மூலம் சாட்சியம் அளிக்க வேண்டுகோள் வைக்கப்பட்டு வேண்டுகோள் அனுமதிக்கப்பட்டு தற்போது தஞ்சாவூர் மாவட்ட நீதிமன்ற காணொளி அறையில் இருந்து சி. மணிகண்டன் Assistant Programmer PDC, Thanjavur/ Remote co-ordinator அவர்கள் தஞ்சாவூர் மாவட்ட நீதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்டு அவரது முன்னிலையில் சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் பொது அறுவை சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 10.03.2018 ம் தேதியன்று நான் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை மன்னார்குடியில் முழுநேர பணியில் இருந்தபோது மாலை 06.00 மணியளவில்

சென்னை எம்ஜிஆர் நகரை சேர்ந்த 75 வயது மதிக்கதக்க ஆண் திரு. காந்தி அவர்கள் அவசர சிகிச்சை பிரிவிற்கு வந்தார். அவரை விசாரித்தபோது அன்றையதினம் மதியம் 02.00 மணியளவில் அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் வடுவூர் புதுக்கோட்டை சாலையில் வைத்து தன்னை கம்பால் தாக்கியதாக அவரே கூறினார். அவர் சுயநினைவுடன் காணப்பட்டார். அவருக்கு இடதுபக்க காலில் 3X1 cm அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. அவர் உடனடியாக உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு தேவையான சிகிச்சைகள் அளிக்கப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று அளித்தேன். **மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சம்பவம் குறித்து போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னிடம் வந்த நோயாளி காயம்பட்டதாக சொன்ன நேரம் மதியம் 02.00 மணி. என்னிடம் சிகச்சைக்கு வந்த நேரம் மாலை 06.00 மணி. காயத்தின் வயது குறித்து குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. மேற்படி காயம் நோயாளி சொன்ன விதத்தில் இல்லாமல் கூட வேறு விதத்தில் கூட ஏற்படலாமா என்றால் ஏற்படலாம். இரண்டு நபர்கள் சேர்ந்து கம்பால் தாக்கியபோது வேறு காயங்கள் ஏற்பட வாய்ப்புஉள்ளதா என்றால் வாய்ப்பு உண்டு. ஆயுதத்தை என்னிடம் காண்பித்து விசாரித்தார்களா என்றால் இல்லை.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi